பூவிருந்தவல்லி, அருள்மிகு திருக்கச்சி நம்பிகள் மற்றும் வரதராஜப் பெருமாள்

# திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.10 கோடி மதிப்பிலான சொத்து மீட்பு!

சென்னை, ஆக. 4 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின் படியும் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ளதிருக்கோயில்களுக்குச்hசொந்தமானh சொத்துக்களைர் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அதன்படி திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி, அருள்மிகு திருக்கச்சி நம்பிகள் மற்றும் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலுக்கு சொந்தமான ரூ.10 கோடி மதிப்பீட்டிலான சொத்து மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி, அருள்மிகு திருக்கச்சி நம்பிகள் மற்றும் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலுக்கு சொந்தமாக பூவிருந்தவல்லி புறவழிச்சாலையில் 17,424 சதுரடி நிலம் உள்ளது. இந்நிலத்தினை பி.பாஸ்கர், ஏ.பாஸ்கர், எஸ்.வேலுமுத்து மற்றும் என்.விஸ்வநாதன் ஆகியோர் ஆக்கிரமித்து கட்டிடம் கட்டி வணிக பயன்பாட்டிற்காக உள்வாடகைக்கு விட்டிருந்தனர்.

இந்நிலையில் வேலூர் மண்டல இணை ஆணையர் நீதிமன்றத்தில் சட்டப்பிரிவு 78 மற்றும் 79 -ன் கீழ் ஆக்கிரமிப்பை அகற்றிட உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவினை எதிர்த்து ஆக்கிரமிப்பாளர்கள் ஆணையர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு, இணை ஆணையரின் உத்தரவு உறுதி செய்யப்பட்டது.

ஆணையர் உத்தரவினை எதிர்த்து மேற்படி ஆக்கிரமிப்பாளர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். அவ்வழக்கில் 25.04.2023 அன்று 3 மாத காலம் அவகாசம் அளித்து ஆக்கிரமிப்புகளை அகற்றிட தீர்ப்பு அளிக்கப்பட்டது.

இத்தீர்ப்பின் அடிப்படையில் நேற்று திருவள்ளூர் மாவட்ட உதவி ஆணையர் திருமதி கே.சித்ராதேவி முன்னிலையில் காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்களின் உதவியுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றி சுவாதீனம் பெறப்பட்டு திருக்கோயில் வசம் ஒப்படைக்கப்பட்டது.

மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.10 கோடியாகும்.

இந்நிகழ்வின்போது திருக்கோயில் செயல் அலுவலர் எம்.மாதவன், வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) கண்ணன், சிறப்பு அலுவலர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.



விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை எஸ்.பி.கே.பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடைபெற்ற விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் 2585 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் விதத்தில்

# வேளாண்மை துறையில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் யாவை?

## மக்களவையில் சி.என். அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி, ஆக. 4

தேசிய அளவில் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கும் வகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்காக வேளாண்மைத்துறையில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் யாவை என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

அதன் விவரம் வருமாறு :

(அ) நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் விவசாயத் துறை முக்கிய பங்கு வகித்து வருகிறதா ?

(ஆ) அப்படியானால், கடந்த 5 ஆண்டு காலகட்டத்தில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத் துறையின் பங்களிப்பு பற்றிய விவரங்களை அளிக்கவும்.

(இ) நாட்டின் ஒட்டு மொத்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத் துறையின் பங்களிப்பு குறைந்து வருகிறதா ? அவ்வாறாயின் அதன் விவரங்களை அளிக்கவும். இல்லையாயின் அதற்கான காரணங்களை குறிப்பிடவும்.

(ஈ) அடுத்த மூன்று ஆண்டுகளில் வேளாண்மைத் துறையின் வளர்ச்சிக்கு அரசு ஏதேனும் இலக்கை நிர்ணயித்துள்ளதா, அப்படியானால் இலக்கை அடைய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

(உ) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி) வேளாண்மைத் துறையின் பங்களிப்பை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

மேற்கண்ட கேள்விகளுக்கு ஒன்றிய வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் அளித்த பதில் வருமாறு :

(அ) முதல் (இ) வரை : புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கம் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட 202223ஆம் ஆண்டின் மொத்த தேசிய வருமானத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி, கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்த மதிப்புக் கூட்டலில் (ஜி.வி.ஏ) விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகளின் பங்கு குறித்து பட்டியலில் அளிக்கப்பட்டுள்ளது.

(ஈ): கடந்த ஆறு ஆண்டுகளில் விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகள் ஆண்டுக்கு 4.4% என்ற அளவில் வளர்ச்சி அடைந்து வருகின்றன. வேளாண் துறையின் வளர்ச்சிக்கு என்று ஒன்றிய அரசு எந்தவொரு குறிப்பிட்ட இலக்கையும் நிர்ணயிக்கவில்லை.

(உ): வேளாண்மையில் உள்ள வளர்ச்சி வாய்ப்புகளை கருத்தில் கொண்டு விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துவதற்காக அரசு பல கொள்கைகள், சீர்திருத்தங்கள், வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் (பி.எம்.எஃப்.பி.ஒய்) கீழ் பயிர் காப்பீடு.

பிரதம மந்திரி கிரிஷி சின்சாயி யோஜனா (பி.எம்.கே.எஸ்.ஒய்) திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனத்திற்கான சிறந்த அணுகல்.

எஃப்.சி.ஐ செயல்பாடுகளுக்கு கூடுதலாக பி.எம்ஆஷாவின் கீழ் புதிய கொள்முதல் கொள்கை.

கிசான் கிரெடிட் கார்டுகள் (கே.சி.சி) விவசாயப் பயிர்களைத் தவிர பால் மற்றும் மீன்வளத்துறை பயனாளிகளுக்கும் உற்பத்திக் கடனை வழங்குகின்றன.

10,000 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை (எப்.பி.ஓ) உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.

நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (என்.எம்.எஸ்.ஏ), மாறிவரும் காலநிலைக்கு ஏற்ப இந்திய விவசாயத்தை மிகவும் நெகிழ்திறன் மிக்கதாக மாற்றுவதற்கான உத்திகளை உருவாக்கி, செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்திய விவசாயத்தில் புரட்சியை ஏற்படுத்தும் திறன் கொண்ட ட்ரோன் தொழில்நுட்பங்களை விவசாயத்தில் பயன்படுத்துதல்.

தேனீ வளர்ப்பு, ராஷ்டிரிய கோகுல் இயக்கம், நீலப் புரட்சி, வட்டி மானியத் திட்டம், வேளாண் காடு வளர்ப்பு, மறுசீரமைக்கப்பட்ட மூங்கில் இயக்கம், புதிய தலைமுறை நீர்வடி நிலப்பகுதிக்கான வழிகாட்டு நெறிகளை செயல்படுத்துதல் போன்றவற்றின் மூலம் கிடைக்கும் நன்மைகளை உறுதி செய்தல்.

வேளாண்மை மதிப்புச் சங்கிலியின் அனைத்து நிலைகளிலும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துதல்.

வேளாண் இடுபொருள் செலவைக் குறைப்பதற்காக மானிய விலையில் விவசாயிகளுக்கு உரம் வழங்குதல்.

மேற்கண்ட வகைகளில் வேளாண்மைத்துறை வளர்ச்சிக்கு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக ஒன்றிய அரசின் வேளாண் துறை அமைச்சர் எழுத்துப்பூர்வமாகப் பதிலளித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம் – சீர்காழி – திருமுல்லைவாசலில்

# பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்! நிவேதா எம்.முருகன் - எம்.பன்னீர்செல்வம் பங்கேற்பு!

நாகை. ஆக.4-

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், திருமுல்லைவாசல் அரசு மேல்நிலைப் பள்ளியில் அரசு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மிதி வண்டிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி தலைமைத் தாங்கினார். மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் கலந்து கொண்டு பள்ளி, மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகளை வழங்கி பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் மயிலாடுதுறை மாவட்டத்தில் 2022-2023ஆம் கல்வியாண்டில் 52 அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் முதலாம் ஆண்டு படிக்கும் 2641 மாணவர்களுக்கும், 3895 மாணவிகள் என 6536 மாணவ, மாணவிகளுக்கு ரூ. 3.14 கோடி மதிப்பில் மிதி வண்டிகள் வழங்கப்பட்ட உள்ளது.

சீர்காழி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் உள்ள 16 பள்ளிகளை சேர்ந்த 1771 மாணவ, மாணவிகளுக்கு ரூ. 85.35 லட்சம் மதிப்பில் மிதி வண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழிக்குட்பட்ட பகுதிகளில் பயிர்காப்பீட்டு திட்டத்தின் கீழ் 94 கோடி பயிர் இழப்பீடு தொகையினையும், தமிழ்நாடு அரசு பெற்று தந்துள்ளது. சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் ஆகியோர் சட்ட மன்றத்தில் மயிலாடுதுறைக்கு அரசு மருத்துவக் கல்லூரி வேண்டும் என்ற கோரிக்கை வைத்துள்ளனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு சட்ட மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அனைத்து நடவடிக்கையும் எடுக்கும். மேலும் சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம் திருமுல்லைவாசல் பகுதியில் உள்ள சிறு துறைமுகம் வேண்டும் என்ற கோரிக்கையும் சட்ட மன்றத்தில் வைத்துள்ளார். இந்த கோரிக்கையையும் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வித்துறையின் மீது தனி கவனம் செலுத்தி கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள். குறிப்பாக நிதி ஒதுக்கீட்டில் கல்வி துறைக்கு ரூ.40 ஆயிரத்து 299 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். மாணவ, மாணவியர்கள் தங்களது கல்வித் திறனை வளர்ப்பதற்கு தேவையான ஆக்கபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். கல்வி என்பது ஒவ்வொருவரின் முன்னேற்றத்திற்கும் முக்கியமானது என்பதை கருத்தில் கொண்டு மாணவர்கள் நல்ல முறையில் கல்வி பயின்று வாழ்க்கையில் உயர வேண்டும் இவ்வாறு அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பேசினார்.



இந்திய ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு துறை அமைச்சர் ஹர்தீப் சிங்பூரியை கழக மாநிலங்களவை உறுப்பினர் இரா.கிரிராஜன், நேற்று (03.08.2023) சந்தித்து கோரிக்கை மனு அளித்தார். உடன் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.இராமலிங்கம் உள்ளார்.

புற்றுநோய் எதிர்ப்பு காசநோய் எதிர்ப்பு போன்றவற்றுக்காக கடலில் இருந்து

# மருந்துகளுக்கான மூலப்பொருட்களைக் கண்டுபிடிக்க கடலை ஆராயும் திட்டம் அரசிடம் உள்ளதா?

## மாநிலங்களவையில் இரா. கிரிராஜன் கேள்வி!



புதுடெல்லி ஆக. 4-

புற்று நோய் எதிர்ப்பு காச நோய் எதிர்ப்பு போன்றவற்றுக்காக கடலில் இருந்து உயிர்காக்கும் மருந்துகளுக்கான மூலப் பொருட்களைக் கண்டுபிடிக்க கடலை ஆராயும் திட்டம் ஒன்றிய அரசிடம் உள்ளதா? கடந்த 3 ஆண்டுகளில் சென்னையில் உள்ள தேசிய பெருங்கடல் தொழில் நுட்ப நிறுவனத்தில் (என்.ஐ.ஓ.டி) கடல் ஆராய்ச்சிக்கு என ஒதுக்கப்பட்ட சிறப்பு நிதி எவ்வளவு? அவ்வாறான ஆராய்ச்சியின் விபரங்களும் முடிவுகளும் என்ன கூறுகின்றன? சென்னையில் உள்ள (என்.ஐ.ஓ.டி.) தேசிய பெருங்கடல் தொழில்நுட்பநிறுவனத்தில் நிரப்பப்பட்ட மொத்த பணியிடங்கள் எவ்வளவு? தற்போதுள்ள காலியிடங்கள் விபரம் என்ன? என்பது குறித்து, புவி அறிவியல் துறை அமைச்சரிடம், மாநிலங்களவை கழக உறுப்பினர் இரா. கிரிராஜன் கடந்த 27.07.2023 அன்று கேள்வி எழுப்பினார்.

புற்றுநோய் எதிர்ப்பு-காசநோய் எதிர்ப்பு போன்றவற்றுக்காக கடலில் இருந்து உயிர்காக்கும் மருந்துக்கான மூலப்பொருட் களைக் கண்டுபிடிக்க கடலை ஆராயும் திட்டம் ஒன்றிய அரசிடம் உள்ளதா?

கடந்த 3 ஆண்டுகளில் சென்னையில் உள்ள தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (என்.ஐ.ஓ.டி.) கடல் ஆராய்ச்சிக்கு என ஒதுக்கப்பட்ட சிறப்பு நிதி எவ்வளவு?

அவ்வாறான ஆராய்ச்சியின் விவரங்கள் மற்றும் முடிவுகள் என்ன?

அதற்கு ஒன்றிய அமைச்சர் அளித்த பதில் வருமாறு:

சென்னையில் உள்ள தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (என்.ஐ.ஓ.டி.) கடந்த 3 ஆண்டுகளில் நிரப்பப்பட்ட மொத்த பணியிடங்கள் எவ்வளவு? தற்போதுள்ள காலி பணியிடங்கள் எவ்வளவு? என்பது குறித்து கழக உறுப்பினர் வழக்கறிஞர் இரா. கிரிராஜன் எழுப்பிய கேள்விகளுக்கு ஒன்றிய புவி அறிவியல் அமைச்சகத்துறையின் அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜீ பதில் அளிக்கையில், “சி.எஸ்.ஐ.ஆர். மத்திய மருந்து ஆராய்ச்சி நிறுவனம்” உயிரியல் மதிப்பீடுகள் புதிய பயோ-ஆக்டிவ் சேர்மங்களின் கண்டுபிடிப்பு மற்றும் திட்டத்தின் ஒருங்கிணைப்பு கடலிலிருந்து மருந்து” என்ற திட்டத்தை புவி அறிவியல் அமைச்சகத்தின் (எம்.ஓ.இ.எஸ்) வரவு செலவுத்திட்ட ஆதரவுடன் செயல்படுத்தியது. இந்தத் திட்டம் கடந்த 2020-ஆண்டு நிறைவடைந்தது.

மொத்தம் 2654 சேர்மங்கள் புற்று நோய் எதிர்ப்பு, ஆஞ்சியோஜெனிக் எதிர்ப்பு, அழற்சி எதிர்ப்பு, பாக்டீரியா எதிர்ப்பு, செயல்பாடுகளுக்காக பரிசோதிக்கப்பட்டன மற்றும் ஜி.பி.சி.ஆர் ஜி.பி.சி.ஆர் பண்பேற்றத்திற்காக சுயவிவரம் செய்யப்பட்டன.

சி.எஸ்.ஐ.ஆர், சி.டி.ஆர்.ஐ. மருந்துகள் துறையின் வரவு செலவுத்திட்ட ஆதரவுடன் “கடல் சிகிச்சை மையம்” என்ற திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.

மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனம் (என்.ஐ.ஓ.டி.) இந்திய கடல்களின் பல்வேறு பகுதிகள் மற்றும் ஆழத்தில் இருந்து கட்டுப்படுத்தப்பட்ட நிலைமைகளின் கீழ் தனிமைப்படுத்தப்பட்ட கடல் நுண்ணுயிரிகள் மற்றும் நுண்ணுயிரிகளை வளர்ப்பது மற்றும் நுண்ணுயிரிகளின் சுகாதார சப்ளிமெண்ட்ஸை உற்பத்தி செய்வது குறித்த ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளது.

இது வயது தொடர்பான மாகுலர் சிதைவைத் தடுக்கிறது மற்றும் அதிக ஆக்சிஜனேற்ற செயல்பாடு மற்றும் ஃப்ரீ ரேடிக்கல்களை அகற்றும் திறன் கொண்ட பைகோசயனின், சி.எஸ்.ஐ.ஆர், சி.டி.ஆர்.ஐ-ஆல் திரையிடப்பட்ட சேர்மங்கள் நிலையான இயக்க நெறிமுறை (எஸ்.ஓ.பி)படி ஐந்து வெவ்வேறு புற்றுநோய் வகை செல் கோடுகளில் (எம்.டி.ஏ - எம்.பி-231 டி.எல்.டி-1, எஃப்.ஏ.டி. ஹெலா மற்றும் ஏ549) மதிப்பீடு செய்யப்பட்டன.

மேலும் ஜி.எஸ்/ஐ.ஐ.சி.டி.5/6 என்ற சக்திவாய்ந்த புற்றுநோய் எதிர்ப்பு மூலக்கூறு அடையாளம் காணப்பட்டுள்ளது.

சுனிடினிப் உடன் ஒப்பிடும்போது மூலக்கூறு ஒரு சிறந்த கட்டி தடுப்பு சுயவிவரத்தைக் காட்டியுள்ளது.

கீமோதெரபியால் தூண்டப்பட்ட புற நரம்பியல் வலியைப் போக்கக்கூடிய ஒரு புதிய கலவை எஸ்பி/சிடிஆர்ஐ4/105 கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் மூலக்கூறு ஈய தேர்வு முறையின் மேம்பட்ட கட்டங்களுக்கு தகுதி பெற்றுள்ளது. புற்றுநோய் எதிர்ப்புச் செயல்பாட்டை கொண்ட மிகவும் சக்தி வாய்ந்த மூலக்கூறு SP/NISER 29 அடையாளம் காணப்பட்டுள்ளது.

தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனம் (என்.ஐ.ஓ.டி.) கடல் ஆக்டினோபாக்டீரியாவிலிருந்து மறு சீரமைப்பு புற்றுநோய் எதிர்ப்பு கலவை, எல்-அஸ்பாரஜினேஸ், நோகார்டியோப்சிஸ் ஆல்ப் ஆகியவற்றைப் பிரித்தெடுத்து காப்புரிமை தாக்கல் செய்துள்ளது.

மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் கீழ் கடந்த 3 ஆண்டுகளில் ரூ.757.74 கோடிக்கு (2020-21-ஆம் ஆண்டில் ரூ.179.69 கோடி, 2021-22-ஆம் ஆண்டில் ரூ.377.55 கோடி மற்றும் 2022-23-ஆம் ஆண்டில் ரூ.200.50 கோடி) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடலிலிருந்து உயிரற்ற மற்றும் உயிருள்ள வளங்களை அறுவடை செய்வது தொடர்பான பல்வேறு பொறியியல் சிக்கல்களைத் தீர்க்க, நம்பகமான உள்நாட்டுத் தொழில்-நுட்பத்தை உருவாக்குவதே தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (என்ஐஓடி) முக்கிய நோக்கமாகும்.

எரிசக்தி மற்றும் நன்னீர், ஆழ்கடல் தொழில்நுட்பம் மற்றும் கடல் சுரங்கம் கடலோரப் பாதுகாப்பு, கடல் ஒலியியல், கடல் சென்சார்கள் மற்றும் கடல் மின்னணுவியல் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு துறையில் என்.ஐ.ஓ.டி. பணிகளை மேற்கொண்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் என்.ஐ.ஓ.டி. மேற்கொண்ட ஆராய்ச்சியின் முக்கிய முடிவு பின்வருமாறு:

யூனியன் பிரதேச இலட்சத்தீவின் கம்பேனி சுட்மத் மற்றும் அமினி தீவுகளில் நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரைக் குடி நீராக்கும் நிலையங்களை நிறுவ என்.ஐ.ஓ.டி.யின் குறைந்த வெப்ப நிலை வெப்ப கடல் நீரை குடி நீராக்கும் (எல்.டி.டி.டி.) தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது.

கவரொட்டி தீவில் கடல் வெப்ப ஆற்றல் (ஓ.டி.சி.சி.) இயங்கும் ஒரு நாளைக்கு 1 இலட்சம் லிட்டர் எல்.டி.டி.டி. ஆலையின் வடிவமைப்பு நிறைவடைந்தது.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் நாளொன்றுக்கு 2 மில்லியன் லிட்டர் எல்.டி.டி.டி. அணு உலை அமைப்பதற்கான விரிவான வடிவமைப்பு முடிக்கப்பட்டது.

மத்திய இந்தியப் பெருங்கடலில் 5270 மீட்டர் ஆழத்தில் என்.ஐ.ஓ.டி. உருவாக்கிய ஆழ்கடல் சுரங்க இயந்திரத்தின் நகர்வுத்திறன் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டது.

முதல் இந்திய மனித கடல் மிஷன் “சமுத்திரயான்” அக்டோபர் 30, 2021 அன்று ஏவப்பட்டது. மனித நீர்மூழ்கிக் கப்பலுக்கான 500 மீட்டர் ஆழம் மதிப்பிடப்பட்ட பணியாளர் கோளம் மனித மதிப்பிடப்பட்ட செயல்பாடுகளுக்கு சான்றளிக்கப்படுகிறது.

6000 மீட்டர் ஆழத்திற்கு மதிப்பிடப்பட்ட தன்னாட்சி நீருக்கடியில் வாகனம் (ஏ.யு.வி.) கையகப்படுத்தப்பட்டு சி.ஐ.ஓ.டி.யில் பாலிமெட்டாலிக் முடிச்சு தளத்தில் ஆய்வுக்கு பயன்படுத்தப்பட்டது.

கேரளாவின் பூந்துரா கடற்கரையின் கடலோர பாதுகாப்புக்கான விரிவான பொறியியல் வடிவமைப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்கு வங்கக் கடற்கரை, தமிழ்நாடு கடற்கரை மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் ஆழமற்ற நீர் (0-30 மீட்டர் ஆழம்) குளியல் அளவீடு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

துருவப் பகுதிகளுக்கான செயலற்ற ஒலி கண்காணிப்பு அமைப்பை உருவாக்க ஆர்டிக் பெருங்கடலில் நிலை நிறுத்தப்பட்டது.

வானிலை மற்றும் கடலியல் அளவுருக்களின் நிகழ் நேர அவதானிப்புகளை வழங்குவதன் மூலம் இந்திய வானிலை முன்னறிவிப்பு நடவடிக்கைகளை ஆதரிப்பதற்காக, அரபிக்கடல் மற்றும் வங்காள விரிகுடாவில் இந்திய மிதவை வலையமைப்பை என்.ஐ.ஓ.டி. பராமரித்து வருகிறது.

என்.ஐ.ஓ.டி.4 ஆராய்ச்சிக் கப்பல்களை (சாகர் நிதி, சாகர் மஞ்சுஷா, சாகர் தாரா மற்றும் சாகர் அன்வேஷிகா) பராமரித்து இயக்குகிறது.

மேலும் கடலோர நீரில் தொழில்நுட்ப செயல் விளக்கம், கணக்கெடுப்பு, கள சோதனைகள் செயல்பாடுகளுக்காக மேற்கொள்ளப்படுகின்றன.

உறுதியான கோள வகை கூண்டுகளை பயன்படுத்தி தானியங்கி மீன் தீவன அமைப்பு உருவாக்கப்பட்டு, அந்தமான் தீவுகளில் புரோட்டோ அலகு பயன்படுத்தப்பட்டது.

ஆராய்ச்சி நடவடிக்கைகளின் அடிப்படையில் பல காப்புரிமைகள், சக மதிப்பாய்வு வெளியீடுகள் மற்றும் உள் நாட்டில் உருவாக்கப்பட்ட சில தயாரிப்புகளின் தொழில்நுட்ப பரிமாற்றம் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.

கடந்த 3 ஆண்டுகளில் என்.ஐ.ஓ.டி.யில் நிரப்பப்பட்ட மொத்த ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் 562 ஆகும். “இவ்வாறு ஒன்றிய அமைச்சர் கிரண் ரஜிஜீ தமது பதில் அறிக்கையில் தெரிவித்தார்.”



அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், கீழையூர் ஊராட்சி அரசுப்பள்ளியில் கட்டப்பட்டுள்ள அரங்க மேடையினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா ஆகியோர் உள்ளனர்.